# வடக்கு-கிழக்கு பகுதிகளை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் சக்தி இலங்கைப்படையிடம் இல்லை!

·05· 1992
பகுதி

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 3 இதழ் 95
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16 — 05 — 1992

(சென்னை)
வடக்கு-கிழக்குப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரக்கூடிய சக்தி இலங்கைப் படைகளிடம் இல்லை என 'புரன்ட் லைன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. அச் சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்:- இலங்கைப் பிரச்

(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு யாழ். செல்வதற்கு தமிழ் குழுக்கள் எதிர்ப்பு

[கொழும்பு]
தெரிவுக்குழு யாழ். செல்வதை கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் எதிர்த்துள்ளன.
தெரிவுக்குழுவை சந்திக்க விரும்பினால் புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பிற்கு வரட்டும் எனவும் அக்குழுக்கள் கூறியுள்ளன.

[4-ம் பக்கம் பார்க்க]

## 1,500 ரூபாவீதம் யாழ். லொறிச்சாரதிகளிடம் வவுனியாவில் பணம்பறிப்பு!

(வவுனியா)
வவுனியாவில் ... இராணுவ சோதனை ... களில் லொறிகளில் வடபகுதிக்குள் கொண்டுவரப்படும் பொருள்களை விரைவாக சோதனை செய்வதற்கு இராணுவத்தினருக்கும், முஸ்லிம் தொழி

[4ம் பக்கம் பார்க்க]

## ★ விடுதலைப்புலிகளை தடை செய்தது குறுகிய தேசிய நலன்கருதி இந்தியா எடுத்த நடவடிக்கை

## விடுதலைப்புலிகள் தலைமைச் செயலகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)
"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு சட்டவிரோத அமைப்பாக பிரகடனப் படுத்தி இந்திய அரசு தடைவிதித்துள்ளது. தனது குறுகிய தேசிய நலனையும், உடனடி அரசியல் லாபத்தையும் கருத்தில்கொண்டு இந்தியா எடுத்துள்ள இந்த நடவடிக்கை குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. தமிழீழ மக்களின் நியாயமான தேசியப் போராட்டத்திற்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்துவரும் துரோக நடவடிக்கையின் ஒரு அம்சமாகவே நாம் இதனைக் கருதுகிறோம்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அதிகார பூர்வமான அறிக்கையில் கூறியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புலிகள் இயக்கத்தை தடை செய்ததன் மூலம் தென்னாசியாவிலுள்ள தனது நேச சக்தியான தமிழீழ தேசிய இனத்தை இந்தியா அந்நியப் படுத்திவிட்டது. இதுமிகவும் கவலைக்குரிய விடயமாகும். தூரநோக்கற்ற ராஜதந்திர விவேகமற்ற இந்த அவசர நடவடிக்கையானது எதிர்காலத்தில் இந்திய பூகோள-அரசியல் நலன்களுக்குத்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கோரப்படும்- சவான்

(புதுடில்லி)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசிடம் கோரப்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

## நீதிபரிபாலனத்துக்கு உட்பட்டது - பிரட்மன்

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் கையளிப்பது தொடர்பான விவகாரம் நீதிபரிபாலனத்திற்கு உட்பட்டது என்று ஜனாதிபதி

(4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலகமருகில் நான்கு இளைஞர் கைது

[கொழும்பு]
கொழும்பு காலிமுகத் திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கருகில சந்தேகத்தின் பேரில் நாலு இளைஞர்களைக் கடற்படையினர் கைதுசெய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.
ஆட்டோ வண்டியொன்றில் சென்ற இந்த நான்கு இளைஞர்களையும் கடற்படையினர் நிறுத்திச் சோதனை செய்தபோது இவர்களிடம் தேசிய அடையாள அட்டையோ அல்லது கடவுச் சீட்டோ ஏதும் இல்லாததனால் இவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் போர்க்கள தலைமைப்பீடம் அமைக்க இராணுவம் முயற்சி!

(கொழும்பு)
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் யுத்த நடவடிக்கைகளைக் கவனிக்க, போர்க்களத் தலைமைப்பீடம் ஒன்றை அமைக்க இலங்கை உயர்மட்ட இராணுவப்பீடம் தீவிரமாக முனைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.
இப்போர்க்களத் தலைமை

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடி நடைபெறும்

(கொழும்பு)
யாழ். குடாநாடுமீதான இராணுவ நடவடிக்கை கைவிடப்படவில்லை என்று கூட்டுப் படைத்தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.
இப்பகுதியில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினர்.

[4ம் பக்கம் பார்க்க]

## ஆயிரம் பௌத்த பிக்குகள் யாழ். வர ஏற்பாடு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளை மீண்டும் சந்திப்பதற்கு ஆயிரம் பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவொன்று விரைவில் யாழ் நகருக்கு செல்ல இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
அண்மையில் யாழ். நகருக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சுக்கள் பற்றிய அறிக்கைஒன்றைபிக்குகள்குழு

(4.ம் பககம் பார்க்க)

## புலிகள விவகாரம்: அரசியல் பழிவாங்கல் இடம்பெறலாம் — கருணாநிதி

(சென்னை)
புலிகள் இயக்கம் மீதான தடையை அ. அ. தி. மு. க. அரசு தமது எதிரிகள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள பயன்படுத்திக்கொள்ளும் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.
இத்தடையினால் தமிழகத்

(4ம் பக்கம பாரிக்க)

## இலங்கைத் தமிழருக்கு தன்னாட்சி வழங்குமாறு இந்திய கம்யூனிஸ்ட்கட்சி வலியுறுத்து

[புதுடில்லி]
இலங்கைத் தமிழருக்கு தன்னாட்சி வழங்குவதில அரசியல் தீர்வு ஒன்றை எட்டும்படி இலங்கை அரசை தொடர்ந்து வற்புறுத்துமாறு சி. பி ஐ. எம். புதுடில்லி அரசைக் கேட்டுள்ளது.
மேலும் அக்கட்சி தெரிவிக்கையில்: இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை உத்தரவை தமிழகத்தில் புகலிடம் தேடியுள்ள இலங்கைத் தமிழருக்கு எதி

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### மணமகள் தேவை

அச்சுவினி நட்சத்திரம், 3ம் பாதம், 36 வயதுடைய அழகிய பெண்ணுக்கு உள்நாட்டு அரசாங்க உத்தியோகம் அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை. சைவ போசனம். செ. விஜயரத்தினம், 'இலட்சுமி திருமண சேவை', நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி 6294)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

### வைத்திய சேவை

வியர்வைப் பருக்கள், முகப் பருக்கள், சதை வளர்ச்சி, தலைமயிர் வளர, கழலைக்கட்டி, தலைமயிர் நரை மாறுவதற்கு, வாதம், நரம்புத் தளர்ச்சி, தேமல், வெண்குஷ்டம், மாதவிலக்குக் கோளாறுகள், செய்வினை, சூனியம், பிணிதோஷம் போன்ற வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியர். எம். கருணாதரன், வேளாங்கண்ணி வைத்தியசாலை, 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (சி6293)

### ஜோதிடம்

திருமணப் பொருத்தங்கள், ஜெனன ஜாதகங்கள், குறிப்புகள் கணிக்க, பார்வையிட நாடுங்கள்: சின்னத்தம்பி தம்பு (பரம்பரை ஜோதிடர்), நவாலி தெற்கு, மானிப்பாய். செவ்வாய் மாற்றமும் விற்பனைக்குண்டு. (சி 6312)

### அர்பாள் திருமண சேவை

28 வயசு Lecturer, 33 வயது Bank Staff, 32வயது Accountant ஆகியோருக்கு மணப் பெண்கள் தேவை. ஞாயிறில் தொடர்புகொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள், சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர். (சி 6390)

### ஆண்டு 7

''வரலாறும் சமூகக் கல்வியும்'' செயல் நூல் ஆண்டு-7 புதிதாக வெளிவந்துள்ளது. அரசாங்கப் பாட நூலுக்கு அமைய மீட்டல் வினாவிடைகள், செயற்பாடுகளுக்கு விடைகள், தவணைப் பரீட்சை மாதிரி வினாத் தாள்-விடைகள் யாவும் ஒருங்கே அமைந்தது. ஆக்கம்: நா. மயில்வாகனம், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். விலை: 30/- பிற மாவட்டங்களில் விலை: 35/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். (சி 6298)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## சங்கீத ஆசிரியைக்கான வெற்றிடம்

தராதரம், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 25-05-92க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:

**செயலாளர்,**
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி-6304)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ந. அருந்தவமலர் [வவி]**
(சரவணை கிழக்கு)

மலர்வு: **22-01-1972**  உதிர்வு: **16-05-1988**

அன்பின் பிறப்பிடமாய் திகழ்ந்த
அருந்தவமலர் வவி
ஆண்டுகள் நான்கும் கடந்தாலும்
ஆறுதல் சொல்ல யாருமில்லை
எம் நெஞ்சங்கள் உம்மை மறக்கவில்லை
எம்துயர் பிறர் அறியார்
என்றும் உன் நினைவு
எம் மனதை விட்டு நீங்கா

உமது பிரிவால் துயருறும்
பப்பா, அம்மா,
அண்ணு (பேபி), சகோதரிகள்.
தம்பி (ரஞ்சித்)

ஆ. நல்லையா,
26, கனகசபை வீதி,
மானிப்பாய்.

(சி-6290)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992-08-31ஆம் திகதிவரை என்னுல் பெற்றுக்கொள்ளப்படும்.

1. தாவரவியல் பேராசிரியர்.
2. புள்ளிவிவரவியலில் பேராசிரியர்.
3. பௌதீக இரசாயனவியல் பேராசிரியர்.
4. கணனி விஞ்ஞானத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).

### சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர்: ரூபா 12,200 -6x300—14,000/- (மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 ரூபா 9,600—8x250—11,600/- (மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000—5x250— 9,250 /- (மாதமொன்றுக்கு)
உதவி விரிவுரையாளர் ரூபா 3,900/ மாதமொன்றுக்கு நிலையானது) (தகுதிகாண்) (ஆண்டு ஒன்றுக்கு)

துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப்பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4500—10x200 – 6500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்).

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக்கிளையில் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 x 10 சதமமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பெற்ற தபாலுறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனிவிண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-05-12.

(எ-2143)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

**1. சுகாதாரப் போதனாசிரியர்**
**2. தாதியர் போதனாசிரியர்**

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கல்வித் தகைமை, அனுபவம், ஆற்றல், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோரிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 26-06-92க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும் 28-06-92 காலை 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
14-05-92.

(எ-2147)

## மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

# பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர், மானிப்பாய் பரிஸ் தெ. ப, பொ. உ. வி. கூ. சங்கம், மானிப்பாய்'' என்ற முகவரிக்கு 27-05-1992க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.

1. கணக்காளர் – தரம் 104.7–9க்கு அமைய
சம்பளத் திட்டம்:
$$\frac{1165 — 2170}{60 X 3 — 75 X 11}$$
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும்.
தகைமைகள்:
(அ) கூட்டுறவுப் பணியாளர் 13வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்டத்தில் கணக்கு சம்பந்தமான பதவியில், 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது
(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ த. (உயர்தரம்)வில கணக்கியலை உள்ளடக்கிய 3 பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. காசாளர் – தரம் 306.8–10க்கு அமைய
சம்பளத் திட்டம்:
$$\frac{1045 — 1705}{40X4 — 50X10}$$
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.
தகைமைகள்:
(அ) கூட்டுறவுப் பணியாளர் 11-வது சம்பளத் திட்டத்தில் காசாளர்/விற்பனை நிலையப் பதவியில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.
அல்லது
(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க பொ. த. உயர்தரம் 3 பாடங்களும் அத்துடன் கூட்டுறவுச் சங்கத்தில் காசாளர்/விற்பனைநிலைய பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

3. இலிகிதர் – தரம் 302.8 — 10க்கு அமைய
சம்பளத்திட்டம்:
$$\frac{1005 — 1705}{40 X 5 — 50 X 10}$$
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்,
தகைமைகள்:
(அ) கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டத்தில், இலிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) ஒரே அமர்வில், எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயஎண்கணிதம் தமிழ் மொழி என்பனவற்றை உள்ளடக்கியதாக 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த. (சாதாரண) சித்தி.

1. சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. வயதெல்லை 21 — 45 வருடங்கள் சங்க பணியாளருக்கு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

இங்ஙனம்
கூட்டுறவு சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்.

(சி-6311)

சந்நிதியான் ஆச்சிரமம் நடாத்தும்

"பாராட்டு விழா"

பாராட்டப்படுபவர்:

திரு. கா. நீலகண்டன் ஆசிரியர்

விழா நிகழ்ச்சிகள்

இடம்: தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி தேவஸ்தானம்

காலம்: 1992 ஆண்டு வைகாசித் திங்கள் 4-ம் நாள் (17-5-92) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி

பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிப்பவர்

நல்லை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர்

பேராசிரியர் அ. துரைராசா அவர்களால்

''புலவர்மணி'' என்ற கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

இன்னிசை வேந்தன்

பொன். சுந்தரலிங்கம் அவர்களின்

இசைக்கச்சேரி காலை 9-30 மணியளவில் நடைபெறும்.

மதிய போசனம் ஆச்சிரமத்தால் வழங்கப்படும்.

செ. மோகனதாஸ்,
ஆச்சிரம நிர்வாகி.

(சி-6306)

## மட்டு. நகரில் மீன்பிடிக்க விசேட அனுமதி அட்டைகள்

(மட்டுநகர்)

மட்டக்களப்புக் கடலில் மீன் பிடிப்பதற்கு விசேட அனுமதி அட்டைகளும், அடையாள அட்டைகளும் வழங்கப்பட உள்ளன.

இந்த அட்டைகளை வைத்திருப்பவர்களே கடலில் மீன் பிடிக்கலாம என்று அறிவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்றுவரும் இலட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீ பாதாள ஞான வைரவர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தினரால் 'ஆத்மஜோதி' ஆசிரியர் நா. முத்தையாவின் 75வது ஜெயந்தி தினம் இன்று 16ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் கைதடி சைவச்சிறுர் இல்லத்தில் நடைபெறும் ஜெயந்தி தினத்துக்கு நல்லூர் உதவி அரசாங்கஅதிபர் திரு. ஆ.மகாலிங்கம் தலைமை வகிக்கின்ருர். (சு)

## மூவாயிரம் தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தரநியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள 3,000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. பி.டி.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ரி)

C. C. C. Clinic

வெளிக்கள மருந்தாளர் பரீட்சைக்கான பாடவிதான விரிவுரைகளும் பயிற்சியும்

மருந்தாளர் பயிலுனர்க்கான வைத்தியச் சபையினுலான பதிவும (Medical Council Registration) செய்து கொடுக்கப்படும்.

வகுப்புக்கள் 23-05-92ல் ஆரம்பமாகிறது.

External Pharmacist பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களும் Apparantice in Pharmacy பதிவுக்காயவர்களும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்;

உரிமையாளர்:

C. C. C. கிளினிக்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-2145)

ஓம் சக்தி

அருள்மிகு சாவகச்சேரி வாரிவன

ஓம் சக்தி

# ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சித்திர மஞ்சரத வெள்ளோட்ட - மஞ்சத்திருவிழாச் சிறப்பு மலர்


## ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வரலாறு

யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் காலத்தில், சாவகச்சேரி நகரில் வாரிவனப்பதியில் ஸ்ரீமுத்துமாரிஅம்பாள் தோன்றிக் கோவில்கொண்டு எழுந்தருளினர். போர்த்துக்கேயர் வருகைக்கு முன் சாவகச்சேரி நகருக்கு வாரிவனம் என்பது பெயர்.

இக்கோவில் ஆதிகாலத்தில் தற்போது உள்ள சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் இருந்தது. போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பால் இத்தலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டது. இக்காலத்தில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் கோவிலைப் புனருத்தாரணம் செய்ய எண்ணி, ஓலையால வேயப்பட்ட சிறிய இடத்தில் அம்பாளைப் பாலஸ்தாபனம் செய்து பூசை செய்யப்பட்டது. காலத்தின் சீர்கேட்டால் அதே இடத்தில் அம்பாள் வெகு காலமாக வீற்றிருந்தார்.

இச்சமயம் அம்பாளின் அற்புதங்களாலும், அருளாலும்' அடியார்கள், ஆதீனகர்த்தா ப. முருகேசு, அர்ச்சகர் சி.தம்பையாக் குருக்கள் ஆகியோரின் முயற்சியால் அம்பாளுக்குக் கோவில் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இப்பொழுது அம்பாளின் அருளால், அம்பாளைச் சூழவுள்ள அடியார்களால் நிதி சேகரிக்கப்பட்டு, சிற்பக் கலைச் செல்வன் கலாமோகன் குழுவினரால் சித்திரப் மஞ்சரதம் செய்விக்கப்பட்டு வைகாசி விசாகமும், பூரணையும் கூடிய இன்று, வெள்ளோட்டமும், திருவிழாவும் நடைபெற ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருள் அடியார்களுக்குக் கிட்டியுள்ளது பெரும் பெரும் பேருகும்.

ஓம் சக்தி ஓம்



காலம்:

இன்று
16-05-1992
சனிக்கிழமை

நேரம்:
காலை
8-30 மணி

ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருள் பெற

ஜெயா ஆட்போட்டோ
கண்டி வீதி,
சாவகச்சேரி
★ ★ ★

அம்பாள் ஸ்ரோஸ்
இல, 2, பஸ் நிலையம்
சாவகச்சேரி
★ ★ ★

சிவா ஸ்ரோஸ்
இல 12, சந்தை உட்புறம்
சாவகச்சேரி
★ ★ ★

யூனியன் பேக்கரி
கண்டி வீதி.
சாவகச்சேரி
★ ★ ★

பரம்ஸ் பஸ் நிலையம் சாவகச்சேரி

ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருள் பெற

திருப்பதி
இல 6, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.
★ ★ ★

சிவா வர்த்தக களஞ்சியம்
இல. 22, டச்சு வீதி
சாவகச்சேரி
★ ★ ★

கமலா ஸ்ரோஸ்
சந்தை உட்புறம்
சாவகச்சேரி
★ ★ ★

N.S. ஸ்ரோஸ் களஞ்சியம்
சந்தை உட்புறம்
சாவகச்சேரி
★ ★ ★

## 10 லொறிகளில் உணவுப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்கு இன்று சனிக்கிழமை காலை 10 லொறிகள் காங்கேசன்துறைக்குச் செல்லவிருக்கின்றன

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் 25 சிங்கள தொழிலாளர்களும் 2 உணவுக் களஞ்சிய பொறுப்பாளர்களும் கடமையாற்றுவதுகுறிப்பிடத்தக்கது. (மா)

## ஆவண நிலையம் திறப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக ஆவண நிலையம் நேற்று வெள்ளி காலை செயலகத்தின் மேல்மாடியில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மங்கள விளக்கேற்றி வைக்க திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகரால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி ஆவண நிலையப் பொறுப்பாளராக சிரேஷ்ட திட்டம் செயற்படுத்தல் அலுவலர் திரு. அ. சிவமூர்த்தி அரச அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். (மா)

### யாழ் இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் குடாவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமாக படையினர் ஏற்கனவே வகுத்த திட்டத்தின்படி தேவையைப் பொறுத்து நடைபெறும் என்றும் தெரிவித்த அவர் எப்போது நடைபெறும் என்பதைத் தெரிவிக்க மறுத்து மறுத்துவிட்டார். (ரி)

### புலிகள் விவகாரம்:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில அரசியல் பழிவாங்கல்கள் தொடர்ந்து நடைபெறக் கூடும் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். (ரி)

### தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தெரிவுக்குழு யாழ்.செல்வதை தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சிலா வன்மையாக எதிர்க்கின்றார்கள் என 'புரன்ட்லைன்' தெரிவித்துள்ளது. (சி)

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னையை அரசியல் ரீதியில் தீர்க்கக்கூடிய சக்தியும் அரசிடம் இல்லை. இராணுவத் தீர்விலும் படைகளிடம் போதிய சக்தி இல்லை.

எனவே நாடாளுமன்றத் தெரிவுக குழுவின் முடிவை அரசு எதிர்நோக்கக்கூடியதொரு நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் தத்தமது யோசனைகளைச் சமர்ப்பிக்க முக்கிய கட்சிகளான ஐ. தே. க. வும், சுதந்திரக் கட்சியும் மறுத்துள்ளன.

இதற்கிடையில் இவ்வருட இறுதிக்குள் இப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டுமானால் அது அரசியல் தீர்வாகவே இருக்கவேண்டும். ஏனெனில் தற்போது இராணுவம் செல்லும் வேகத்தில் இராணுவத் தீர்வு சாத்தியமே இல்லை. (சி-கே)

### மட்டுநகரில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

மேற்படி அட்டைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தி வரும் உதைபந்தாட்ட போட்டியின் 2-ம் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்;

நவசக்தி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா மோதும். இப்போட்டி நெல்லியடி ம. ம. வியில் நடைபெறும்.

0 0 0

[யாழ்ப்பாணம்]

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டு சுழகத்தின் முதலாம் வருட நிறைவையொட்டி நடாத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

அரியாலை ஐ. வி. கழகம் எதிர் நியூ சுப்பர் ஸ்ராஸ், சென். தோமஸ் (ஏ) எதிர் யாழ். பல்கலைக்கழகம்(பி) இப்போட்டி யாழ். தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தல் நடைபெறும்.

## கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

'ஷப்ரு' வெற்றிக்கிண்ணத்துக்காக 'ஜெ லி ஸ்ராஸ்' நடாத்தும் 30 ஓவர் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டம்:

காலை 8.30 – அரியாலை வி. க. எதிர் வட்டு ஓல்ட் கோல்ட்ஸ், மாலை 1.00 - ஸ்ரான்லி எதிர் ஜொனியன்ஸ் மாலை 1.00 – மானிப்பாய் பரிஷ் எதிர் மல்லாகம் கி. அ- ச, [கொக்குவில் இந்து மைதானம்)

## எய்ட்ஸ் 60 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 60 பேர் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டுள்ளதாகவும் இவ்எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் மருத்துவ அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. (க)

### இலங்கைத் தமிழருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக பயன்படுத்தாமல் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் புதுடில்லி அரசை கேட்டுள்ளது. (க)

### 1,500 ரூபாவீதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர்களுக்கும் 1500 ரூபா வீதம் செலுத்தும்படி லொறிச் சாரதிகள் வற்புறுத்தப்படுகின்றார்களாம்.

மேற்படி சோதனைகள் முன்னர் செய்யப்படும்போது 500 ரூபா மட்டுமே செலுத்தப்பட்டுவந்ததாம். ஆனால் தற்போது 1500 ரூபா கொடுக்கும்படி இராணுவத்தினர் லொறிச்சாரதிகளை வற்புறுத்திவருகின்றார்களாம். இப்பணத்தைச் செலுத்தத் தயங்கும் லொறிச்சாதிகள் நீண்ட நாட்கள் தடைமுகாமில் தடுத்து நிறுத்தப்படுகின்றார்களாம்.

இவைதவிரத் தடைமுகாம் களில் லொறிகளை சோதனை செய்யும்போது முஸ்லிம் தொழிலாளர்களுக்கு பத்து கொக்காகோலா, ஒரு போத்தல் சாராயம், ஒரு பண்டல் சிகரெட் போன்றவற்றையும் அவர்களுக்கு உடன் வாங்கிக் கொடுக்கவேண்டுமாம். இதே நேரம் லொறியில் பயணம் செய்யும், சாரதி, கிளினர் உட்பட மேலதிகமாக லொறியில் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் தலா 100ரூபா வீதம் ஒவ்வொரு தடை முகாம்களில் உள்ள பொலிசாருக்கும் கொடுக்கவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுவருவதாக பல லொறிச் சாரதிகள் மிகவருத்தத்துடன் தெரிவித்தார்கள். (வி)

# வங்காலை இராணுவ முகாம் வாபஸ் பெறப்படும்?

(யாழ்ப்பாணம்)

வங்காலை இராணுவ முகாம் சில மாதங்களில் வாபஸ் பெறப்படலாம் என்று அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு மைல் சுற்றுடல் விஸ்தீரணத்தைக்கொண்ட வங்காலைப் பிரதேசத்தில் 1990 ம் ஆண்டுஏற்பட்டயுத்த நடவடிக்கைக்குப்பின்னர் 6-ம் வட்டாரத்தில் மட்டுமே இராணுவ முகாமிருந்தது. 1990-ம் ஆண்டு யூன் மாதம் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் வங்காலையில் உள்ள சகல மக்களும் அப்பகுதியிலிருந்து முற்றுமுழுதாக வெளியேறி மடுமுகாம்களிலும் சனி விலேஜ், முகாம்களிலும்இன்று வரையில் அகதிகளாக தங்கியிருக்கின்றனர். ஒரு பகுதியினர் இந்தியாவில் அகதிகளாகவும் தங்கியிருக்கின்றனர்.

கடந்த வருட முற்பகுதியிலும் வங்காலை இராணுவத்தினர் இடம்பெயர்ந்த மக்களை அப்பகுதிக்குப் போய்க் குடியிருக்கும்படியும் தாங்கள் பாதுகாப்புத் தருவோம் என்றும் உறுதிமொழி அளித்திருந்தனர் ஆனால் என்ன நடந்தாலும் மககள் வங்காலைக்குச் செல்ல மாட்டோம் என இராணுவ உயரதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் உறுதியாகத் தெரிவித்து விட்டனர்.

வங்காலை முழுப்பிரதேசத்தையும் இராணுவத்தினரால் முற்றுமுழுதாக பாதுகாத்து வைத்திருக்கமுடியாத நிலையும் இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளதாம்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுககு வங்காலை கரையோரப்பகுதி முழுவதும் இலக்காகி உயிரிழப்புகள் கூடுதலாக ஏற்பட்டுள்ளதும் ஒருபுறம்.

இதன் காரணமாக வங்காலை இராணுவத்தினரை வெளியேறி மக்களை குடியமர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த வருடத்திலிருந்து அரச உயரதிகாரிகளாலும் மற்றும் ஸ்தாபனங்களாலும், பொதுமக்களாலும் சுட்டிக் காட்டப்பட்டு வருகிறதையடுத்தே இராணுவ முகாம் சில மாதங்களில் வாபஸாகலாம் என தெரிய வருகிறது.

அங்குள்ள பொதுமக்கள் கடந்த ஏப்ரல் மாதம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (56)

## அதிக விலைகொடுத்து இந்தியா புலிகளிடம் பாடம் கற்றுக்கொண்டது!

(புதுடில்லி)

அதிக விலைகொடுத்து இந்தியா அரசியல் பாடத்தை இலங்கையில் கற்றுள்ளதாக முன்னாள் இந்திய இராணுவ தளபதிகள் இருவர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் புலிகளுடனான யுத்தத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்கள் குறித்து ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி லெப். ஜெனரல் எஸ். சி. சர்தேஷ் பாண்டேயும் இலங்கையில் புலிகளுடனான யுத்தத்தில இந்தியப் படைகளுக்கு தலைமை வகித்த ஓய்வுபெற்ற இராணுவ தளபதி, லெப். ஜெனரல் திபேந்தர் சிங்கும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படிப்பினையை இந்தியா ஓர் கெட்ட அனுபவமாகக் கருதி அரசியல் நிலைப்பாட்டில் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் இவ்விருவரும் எழுதிய புத்தகங்களில் குறிப்பிட்டுள்ளனர். (சி)

### விடுதலைப்புலிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதகமாக அமையக்கூடும்.

''தமிழ்நாட்டு இளைஞர் சிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதப் பயிற்சி அளித்ததாகவும், தமிழ்நாட்டில் பிரிவினைவாதத்தை தூண்டிவிட்டதாகவும் இந்தியா எமது இயக்கம்மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. இந்திய அரசுதான் பல நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து, ஆயுதமும் வழங்கி, சிறிலங்கா அரசுககு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டது. தமிழ் இளைஞர்களை பகடைக்காயாகப் பாவித்து தனது பூகோள நலன்களைப் பூர்த்தி செய்ய முனைந்தது. அப்பொழுது இந்த நடவடிகககைகளை 'சட்டவிரோதமானது' என இந்திய அரசு கருதவில்லை.

தமிழர் தேசியப் பிரச்னையில் அதாவது ஒரு அந்நிய நாட்டுப் பிரச்னையில் இந்திய அரசுதான் தலையிட்டது. அமைதிப்படை என்ற போர்வையில் தமிழர் தாயகத்திற்கு ஒரு ஆக்கிரமிப்புப் படையை அனுப்பிவைத்ததும் இந்திய அரசுதான். விடுதலைப்புலிகளுடன் போர் தொடுத்து தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்ததும் இந்திய அரசுதான். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பத்தாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்ததும் இந்திய அரசுதான். ஆகவே ஒட்டுமொத்தத்தில் இந்திய அரசுதான், அதுவும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சிப் பீடம்தான் எமது உள்நாட்டு பிரச்னையில் தலையிட்டு டாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த காரணமாகஇருந்தது. இவ்விதம் தமிழீழ மக்களுக்கு எதிராக பெரும் வரலாற்றுத் தவறுகளை இழைத்துவிட்டு இப்பொழுது நாம் இந்திய விவகாரத்தில் தலையிடுவதாக எமது இயக்கம் மீது இந்திய ஆட்சிப்பீடம் குற்றம் சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டு விசமத்தனமானது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில் தேசிய பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக டில்லி ஆட்சிப்பீடம்கூறுகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. விடுதலைப் புலிகள் இந்தியாவின் விரோத சக்தியாகச் செயற்படவில்லை. அத்துடன் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டைக குலைக்கவும் எண்ணவில்லை. இந்தியா அஞ்சுவது புலிகளுக்கு அல்ல தமிழரின் இன உணர்விற்கும் தேசிய விழிப்புணர்விற்குமே இந்தியா பயப்படுகிறது. தமிழ்த்தேசாபிமான எழுச்சியின் புரட்சி வடிவமாகவே இந்திய அரசு புலிகளையும், புலிகளின் தலைவர் பிரபாகரனையும் நோக்குகிறது. இதனால் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து தலைவர் பிரபாகரன்மீது மாசுகற்பிக்க இந்தியா முயற்சிககிறது.

அயல்நாட்டில் இயங்கும் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கமான புலிகள் இயக்கத்தை தடைசெய்வதன் மூலம் தமிழ் நாட்டில் கருவாகிவரும்தேசிய உணர்வலைகளுக்கு அணைகட்டி விடலாமென டில்லி ஆளும் வர்க்கம் கருதுகிறது. எனவே புலிகள் மீதான இத்தடையானது தமிழ்நாட்டுத் தமிழரின் இனவுணர்வற்கும் தேசிய விழிப்புணர்விற்கும் இடப்பட்ட விலங்குகள் என்றே கருதவேண்டும். இந்த விலங்குகளை உடைத்தெறியவேண்டிய பொறுப்பு தமிழக மக்களையே சாரும்.''

### வடக்கு, கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யகத்தை அமைப்பதற்காக, வவுனியா, திருமலை, அனுராதபுரம் ஆகிய மூன்று இடங்களை உயர் இராணுவ பீடம் பரிசீலித்து வருகிறது. அநேகமாக இந்தத் தலைமைப்பீடம் யுத்தங்கள் தொடர்ந்து நடைபெறும் வடக்குப் பகுதியான வவுனியாவில் அமையக்கூடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### ஆயிரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு விரைவில் கையளிக்க இருப்பதாகவும் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண ஆழமான வலுவான திட்டத்தை அரசு இன்னும் அறிவிக்கவில்லையென்பதே விடுதலைப் புலிகளின் கருத்து என்றும் முன்னர் யாழ் நகருக்குச் சென்ற பௌத்தபிக்குகள் குழுத் தலைவர் கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். (வி)

### நீதிபரிபாலனத்துக்கு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

யின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

முதலில் இந்திய நீதிமன்றம் விசாரணைக்கு பிரபாகரனைத் தேவை என்பதை அறிவித்த பின்னர் இலங்கை நீதிமன்றம் அதனைப் பரிசீலித்து முடிவெடுக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 6 தமிழர் கைது

(வவுனியா)

செட்டிகுளம் பகுதியில் உள்ள கிறிஸ்தவக்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் சுற்றிவளைத்து 6 தமிழ் மக்களை கைதுசெய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. (வி)

### பிரபாகரனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் முக்கிய குற்றவாளிகளான விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனையும், அவரது கூட்டாளிகளையும் இலங்கையிலிருந்து வெளியேற்றி இந்தியாவிற்கு கொண்டுவர இயன்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்தியாவில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதையொட்டி எந்த ஒரு அரசியல் கட்சியும் பழிவாங்கப் படமாட்டாது என்றாலும் அவ்இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் எவரும் விட்டு வைக்கப்படமாட்டார்கள் என்றும் திரு.சவான் தெரிவித்தார். (ரி)

### ஜனாதிபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட நாலு இளைஞர்களில் மூவர் முஸ்லிம்கள், ஒருவர் தமிழர். மூன்று முஸ்லிம் இளைஞர்களில் ஒருவர் நீண்ட நாட்களாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தேடப்பட்டுவரும் ஒருவரின் சாயலை ஒத்ததாக இருப்பதாக இவர்களை விசாரணை செய்துவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சுவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81